**உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் - 2018**

---

## 1.1 அபிப்பிராயம்

உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த மற்றும்

காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை

வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் விசேட அதிகாரத்திற்கிணங்க கொடுக்கல் வாங்கல்கள் நிறைவேற்றப்பட்டது எனவும் பிரயோகிக்கக்கூடிய அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அனுமதிப்பதற்கும் அவசியமாக கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததும் எனவும் சொத்துக்களிற்கான கணக்களிப் பொறுப்பை பேணுவதற்கும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது விசேட அங்கீகாரத்திற்கு இணங்க மாத்திரம் சொத்துக்களை அணுகுவதை அனுமதிப்பதற்கும் மற்றும் தற்போதுள்ளவாறான சொத்துக்களுடன் நியாயமான இடைவெளிகளில் மற்றும் பொருத்தமான நடவடிக்கை ஏனைய வேறுபாடுகளுடன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டும் என்பவற்றையும் நியாயமாக உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கணக்கீட்டு போதியளவு கட்டுப்பாடுகளிற்கு “திட்டமிடுதல் மற்றும் பராமரிப்பு” என்ற முறைமையொன்று நிறுவகத்திற்கு தேவைப்படுகின்றது.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2015 திசெம்பர் 25 ஆந் திகதிய பீஈடீ1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | போக்குவரத்துப் படிக்காக உரித்தற்ற பிரதி பணிப்பாளர்கள் இருவருக்கு முறையான அங்கீகாரமின்றி 2017 நவம்பர் மாதம் முதல் மாதத்திற்கு ரூபா 17,500 வீதம் ரூபா 490,000 தொகை செலுத்தப்பட்டிருந் தது. | உரிய கொடுப்பனவுகள் ஆணையாளர் சபையின் அங்கீகாரத்துடனும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் வாய் மூல அங்கீகாரத்தினதும் அடிப்டையில் மேற்கொள்ளப்பட்டிருந்த து நிறுவனத்திற்கு குழு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு முடியாமையின் காரணமாக இந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் இதனால் குழுப் போக்குவரத்து வழங்கப்பட்டிருக்குமாயி ன் நிறுவனத்தால் மேற்கொள்ள வேண்டியிருந்த மொத்தக் கொடுப்பனவில் 80 சதவீத அளவை சேமிக்க முடிந்திருக்கும். | சுற்றறிக்கைக்கு இணங்கியிருக்க வேண்டும். எழுத்து மூல உறுதிப்படுத்தலின் அடிப்படையில் மாத்திரம் நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவத்தி ன் கவனம் செலுத்தப்படும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 32,008,297 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 12,915,575 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 19,092,722 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு மானிய பெறுமானத் தேய்வு பெறுமதி ரூபா 57,419,467 இனால் அதாவது 23.4 சதவீதத்தால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் முக்கிய பகுப்பாய்வுகள்**

| பிரதான வருமானம் / செலவின மூலம் | 2018 ரூபா | 2017 ரூபா | முரண்கள் ரூபா | முரண்கள் சதவீதமாக(%) |
|---|---|---|---|---|
| வட்டி வருமானம் | 400,599,838 | 404,872,556 | (4,272,718) | (1.1) |
| வட்டிச் செலவினம் | 137,858,690 | 138,318,476 | (459,786) | (0.3) |
| தேறிய பெறுமானத் தேய்வு | 187,976,452 | 245,395,919 | (57,419,467) | (23.4) |
| கடன் இழப்பீடு | 4,583,799 | (34,762,394) | 39,346,193 | 113.2 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 ஏப்ரல் 08 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நிதியத்தின் பணிப்பாளராக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படாதிருந்ததுடன் இரண்டாம் நிலை அடிப்படையில் பணிப்பாளர் ஒருவரை சேர்க்ககூடிய வகையில் ஆட்சேர்ப்பு நடைமுறையும் திருத்தப்பட்டிருக்கவில்லை அதனால் தொடர்ச்சியாக பதிற் கடமை பதவியொன்றாக பேணிச்செல்லப்பட்டமையின் காரணமாக செயலாற்றலுக்கு பாதகமாத் தாக்கமளித்திருந்தது. | நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நீண்ட காலமாக பதிற்கடமை பதவிகளில் நியமித்தல் நிறுவனத்தின் செயலாற்றலுக்கு பாதகமாத் தாக்கமளித்திருந்த மையால் வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |
| (ஆ) | 1993 இன் 24 இலக்க உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்திச்( திருத்த) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1916 இன் 22 ஆம் இலக்க உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவிற்கு முரணாக | உரிய பணத்தை அறவிடுவதற்காக மீள் நினைவூட்டல் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளதுடன் அறவிட வேண்டிய பணம் ரூபா 1,244,905 தொகையல்லாமல் ரூபா 862,849 தொகையாக சரிசெய்யப்பட வேண்டும். | மேலதிகமாச் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

ஆணையாளர் சபையின் அங்கீகாரமின்றி முன்னாள் அமைச்சின் செயலாளரால் நிறுவனத்தின் பணிப்பாளர் பதவியில் பதிற்கடமை / கடமை நிறைவேற்றுவதற்காக கணக்காளர் சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். மேலும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது அந்த உத்தியோகத்தருக்காக ரூபா 382,056 தொகையான பதிற் கடமை சம்பளமும் போக்குவரத்துப் படியாக ரூபா 522,000 தொகையும், எரிபொருள் படியாக ரூபா 340,849 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 1,244,905 செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதியத்தின் மூலமும் செயற்திட்டத்தின் மூலமும் உள்ளூராட்சி நிறுவனங்களில் 18 செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 430,152,152 தொகையான செயற்பாடற்ற கடனை அறவிடுவதற்கு போதியளவான வேலைத்திட்மொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்காக அதற்குரிய உள்ளூராட்சி நிறுவனங்களுடன் நேரடியாக கலந்தரையாடல் நடாத்தப்பட்டிருந்ததுடன் கடன் மீதியை மீள் கட்டமைத்தல் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடனை செலுத்துதல் முறையற்றதாக இடம் பெறும் சந்தர்ப்பங்களில் முறைமைப்படுத்தி பெற்றுக்கொள்வதற்கு குறுங்கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (ஆ) பணத்தை கடனாக வழங்குவதன் மூலம் வட்டியை சேகரிப்பதே நிதியத்தின் பிரதான பணியாகும். எனினும் மொத்த வட்டி வருமானம் ரூபா 400,599,838 ஆக இருந்த போதிலும் அதில் 32 சதவீதம் | இது தொடர்பாக ஆணையாளர் சபையிலும் தெளிவுபடுத்தி செயற்பாட்டு செயற்திறனை மேலே உயர்த்துவதற்குத் தேவையான செயற்பாடுகளை தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நோக்கங்களுக்கு பங்களிக்கும் வகையில் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் இலக்கிடல் தொட்பாகவும் முகாமைத்துவம் கனஞ்செலுத்த வேண்டும். |

அதாவது ரூபா 127,046,108 நிலையான வைப்பு வட்டியானமையின் காரணமாக போதியளவான செயலாற்றல் மட்டம் பெறப்பட்டிருக்கவில்லை

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி, நிர்வாகம் மற்றும் செயற்பாட்டு கையேடுகளின் தேவை தொடர்பான ஆய்வின்றியும் எதிர்பார்த்த இலக்கு மற்றும் நியமங்கள் நிர்ணயிக்கப்படாமலும் விலை ஒப்பீட்டு முறையின் கீழ் கூறுவிலை பெறப்பட்டு நிதியத்திற்கான கையேடுகளைத் தயாரிப்பதற்காக பிணைமுறியின்றி ரூபா 200,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. கையேடுகளின் போதியளவனதும் தரத்தன்மை தொடர்பாகவும் மதிப்பீடு செய்யாமல் செலுத்துவதற்குள்ள தொகையில் 50 சதவீதமான ரூபா100,000 தொகையொன்று நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த நிறுவனத்தின் செயற்பாட்டுக் கையேடு 2016 ஆம் ஆண்டு முதல் செய்பாட்டிலுள்ள நிறுவனம் மீள்கட்டமைப்பு நிகழ்ச்சிதிட்டத்தின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட இறுதி அறிக்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இந்தப் பணிகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டத்தின் பரிந்தரையின் அடிப்படையில் 2017 திசெம்பர் 15 ஆந் திகதி நடைபெற்ற ஆணையாளர் சபையின் அங்கீகாரம் உரித்தாகியிருந்நது. அதென் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நிறுவனத்தின் நிதிப் பிரிவை மீளக் கட்டமைப்பதன் கீழ் நிதிக் கையேடும், மனித வள மற்றும் நிர்வாகக் கையேடும் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கையேடுகளின் தரத்தன்மை மற்றும் போதியளவினை பரீட்சிப்பதற்காக 2019 ஆம் ஏப்ரல் 04 ஆந் திகதி தலைவரால் குழுவொன்று நியமிக்கட்டு அதன் பிரகாரம் தேவையான மாற்றங்களைச் செய்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடடிக்கை எடுக்கப்படும். | பெறுகை சுற்றறிக்கைக்கு இணங்க வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தால் சேவையில் நியமிக்கப்பட்ட 15 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நாடுமுழுவதும் அமைந்துள்ள உதவி ஆணையாளர் அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்டிருந்துதுடன் அவர்களிடமிருந்து நிறுவனத்திற்கு ஆகக்கூடிய சேவையினை வழங்குகின்றபோது சேவையில் நியமிப்பதற்கு போதியளவான வேலைத்திட்டமொன்று தயாரிக்கட்டிருக்கவில்லை. | உரிய அபிவிருத்தி உத்தியோகத்களுக்காக கடமைப் பட்டியல் இந்த ஆண்டில் திருத்தம் செய்யப்பட்டு சரிசெய்யப்பட்டதுடன் அவர்களுக்கு நிர்ணயிப்பதற்கு வேலைத் திட்டமொன்று எதர்காலத்தில் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | முறையான பிரகாரம் அரச கடமைகளைத் தயாரித்து அடையக் கூடிய வகையில் நடவடிக்கை எடுத்தல் தொர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ‘‘ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 இன் நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக மீளாய்வாண்டிற்குரிய நிதியத்தினால் தமது விடயப்பரப்பின் கீழ் கொண்டுவரப்படுகின்ற பணிகள் தொடர்பாக அறிந்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 2019 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு குறித்த உத்தியோகத்தகளுக்கு பொறுப்புக்களை கையேற்கும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படும். |